TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,

(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)

Annai Teresa Malagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.

கலைஞர் 100
1924 - 2023

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின்செயல்முறைகள்

## பிறப்பிப்பவர்: திருமதி .ச. திவ்யதர்சினி இ.ஆ.ப.,

ந. க. எண்: 10/சஉ&ஒ/2023

நாள்: 29.06.2024

**பொருள்:** தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் – தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் – கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு – பாலினம் (Gender) – 37 மாவட்டங்களில் உள்ள 111 வட்டாரங்களில் பாலின வள / வானவில் மையம் நிறுவுதல் (Gender Resource Centre Establishment) மற்றும் 3 ஆண்டிற்கான பராமரிப்பு செலவினங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் அனுப்புதல் -- சார்பு.

**பார்வை:**

1. ஆண்டு செயல் திட்டம் 2024-2025, B2.7.2.10& B2.7.2.11. பாலின வள மையம் / வானவில் மையம்.
2. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பாணை எண்.7, நாள்: 27.06.2024.

******

**ஆணை:**

பார்வை 1 ல் காணும் ஆண்டு செயல் திட்டம் மற்றும் 2ல் காணும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் பாலின வள மையம் / வானவில் மையத்திற்கு தேர்வு செய்திட அறிவுறுத்தப்படுகிறது.

2024-2025-ஆம் ஆண்டிற்கு 37 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு மூன்று வட்டாரம் வீதம் 111 வட்டாரங்களில், ஒரு வட்டாரத்திற்கு ஒரு பாலின வள மையம் / வானவில் மையம் வீதம் 111 பாலின வள மையம் / வானவில் மையம் துவக்கிட ஏதுவாக வட்டார அளவிலான கூட்டமைப்புகள் மூலம் தளவாட பொருட்கள் கொள்முதல் செய்திடவும் மற்றும் மூன்றாண்டிற்கான பராமரிப்பு செலவினங்களுக்காகவும் ரூ.555.00 இலட்சம் செலவிட அறிப்பாணை 27.06.2024 அன்று வெளியிடப்பட்டது.

Phone : 91-44-2817 3412 / 13 / 14 Fax : 91-44-2817 3409
E-mail : tncdwho@yahoo.co.in Web : http://www.tamilnaduwomen.org

ஒரு பாலின வள மையத்திற்கு ரூ.5.00 இலட்சம் வீதம் 111 பாலின வள மையம் நிறுவதற்கும், 3 ஆண்டுகால பராமரிப்பு செலவினத்திற்காகவும் ரூ.555.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆண்டு | தளவாட செலவினத் தொகை (இலட்சத்தில்) | பராமரிப்பு செலவினத் தொகை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | முதலாமாண்டு | 1.50 | 1.50 | 3.00 |
| 2. | இரண்டாமாண்டு | 0 | 1.20 | 1.20 |
| 3. | மூன்றாமாண்டு | 0 | 0.80 | 0.80 |
| | மொத்தம் | 1.50 | 3.50 | 5.00 |

பாலின வள மையம் நிறுவுவதற்கும் மற்றும் மூன்றாண்டிற்கான மாதாந்திர பராமரிப்பு செலவினங்களை மேற்கொள்வதற்கும் 37 மாவட்டங்களுக்கும் **ரூ.5,55,00,000/- (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து லட்சம் மட்டும்)**, 2024-2025 -ஆம் ஆண்டிற்கான ஆண்டு செயல் திட்டத்தில் (AAP) தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தில் NRLM (B2.7.2.10) (GRC Establishment cost) B2.7.2.11 (GRC – Facilitation cost) என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, கீழ்கண்ட வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி 111 வட்டாரங்களில் 111 பாலின வள மையங்களை நிறுவிட திட்ட இயக்குநர், அனைத்து மாவட்டங்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வழிகாட்டி நெறிமுறைகள்:**

1. பாலின வள மையம் / வானவில் மையமானதுபாலின பிரச்சினைகள் புகார்கள் அதிகளவில் பதிவான வட்டாரத்தில் அமைக்கப்பட வேண்டும்.
2. வட்டார இயக்க மேலாண்மை அலகு (BMMU) மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்பு (BLF) அலுவலகத்திலோ அல்லது அருகாமையில்பாலின வள மையம் / வானவில் மையம் அமைக்கப்பட வேண்டும். போக்குவரத்து எளிதில் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும் மற்றும், அருகிலுள்ள கட்டிடத்தில் BMMU அமைந்திருக்க வேண்டும்.
3. தனிநபர் பாதுகாப்பு, தனியுரிமை, எளிமையான அணுகல் முறை மூலம் வானவில் மையம் செயல்படுதல் வேண்டும்.
4. வட்டார அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள் இணைந்து தனியாக "பாலின வள மையம்/ வானவில் மையம் ------- வட்டாரம்"என்ற பெயரில் சேமிப்பு வங்கிக்கணக்கு துவங்கப்பட வேண்டும்.
5. பாலின வள மையம் / வானவில் மையம் துவக்கிட ஏதுவாக ரூ1.50 இலட்சமும், மூன்று ஆண்டுகளுக்கான பராமரிப்பு செலவினங்களுக்காக ரூ 3.50 இலட்சமும் 2024-2025 ஆண்டு செயல் திட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளதையடுத்து, தற்போது பாலின வள மையம் / வானவில்

மையம் துவக்க நிதியும் மற்றும் மூன்று ஆண்டு பராமரிப்புச் செலவினத்திற்கான நிதியும் திட்ட இயக்குநர்கள், சம்பந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பின் "பாலின வள மையம்/ வானவில் மையத்தின் வங்கிக் கணக்கிற்கு நிதி விடுவிக்கப்பட வேண்டும்.

6. மேசைகள், நாற்காலிகள், கணினி அமைப்புகள், தொலைபேசி, அடிப்படை முதலுதவி வசதிகள், கட்டில், கோப்பு மேலாண்மை வசதிகள், UPS, இணையம், சுகாதாரப் பொருட்கள் போன்றவை அரசின் கொள்முதல் விதிமுறைகளைப் (Tamil Nadu Tender Act, 2001) பின்பற்றி முறையாக மூன்று விலைப் புள்ளிகள் பெற்று வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலமாகவே கொள்முதல் செய்யப்பட வேண்டும்.
7. பாலின வள மையம்/ வானவில் மையத்தின் நீடித்த நிலைத்த தன்மைக்காகவும் மூன்றாண்டுக்கு பிந்தைய பராமரிப்புச் செலவினத்திற்காகவும் சம்மந்தப்பட்ட வட்டாரத்தின் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும், ஆண்டொன்றிற்கு பங்குத் தொகையாக ரூ.2,000/- காசோலையாகவோ அல்லது ECS மூலமாகவோ பாலின வள மையம் (GRC) கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.
8. மேலும், வட்டாரத்திலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் பாலின வள மையத்திற்கு தங்கள் பங்குத் தொகையாக ஆண்டொன்றிற்கு குறைந்தபட்சம் ரூ.100/- சம்பந்தப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் செலுத்திடவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது அனைத்து குழுக்களிடமிருந்து வசூலித்து, காசோலையாகவோ அல்லது ECS மூலமாகவோ பாலின வள மையம் (GRC) கணக்கிற்கு செலுத்தி உரிய இரசீதினை சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு அளித்திட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.
9. பங்குத் தொகையானது பாலின வள மையம்/ வானவில் மையம் துவங்கப்பட்டு 1 மாத காலத்திற்குள் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களிடமிருந்து வசூலித்து பாலின வள மையத்தின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவதை உறுதி செய்திட வேண்டும்.
10. பாலின வள மையத்தின் வங்கிக் கணக்கில் உள்ள பங்குத் தொகை மற்றும் வட்டித் தொகையானது மையத்தின் பராமரிப்புச் செலவினத்திற்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.
11. பாலின சமுதாய வள வல்லுநர்கள் அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கள் மூலம் நியமனம் செய்யப்பட்டு, பாலின/வானவில் மைய செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல் வேண்டும்.
12. அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் (PLF) கூட்டங்களிலும், சுய உதவிக் குழுக்களின் கூட்டங்களிலும், பாலின சமுதாய வள வல்லுநர்கள்

கலந்துகொண்டு பாலின வள மையத்தின் பணிகளை விவாதித்து, தீர்மானங்களாக நிறைவேற்றப்பட வேண்டும்.

13. அனைத்து நாட்களிலும் சுழற்சி முறையில் இரண்டு அல்லது மூன்று சமுதாய வள வல்லுநர்கள் GRC–இல்செயல்பாட்டில் இருக்க அட்டவணை தயார் செய்து அதனடிப்படையில் பாலின வள மையம்/ வானவில் மையம் (GRC) செயல்பாட்டினை கண்காணிக்க வேண்டும்.
14. பாலின வள மையம்/ வானவில் மையம் (GRC)–இன் தினசரி செயல்பாடு தேசிய பாலின சமூக வல்லுநர்களால் (NRP) நிர்வகிக்கப்பட்டு மேற்பார்வையிடுவார், அவர்களு,க்கு அரசு விதிமுறைப்படி பெயரளவு ஊதியம் வழங்கலாம்.
15. பாலின வள மையம்/ வானவில் மையம் (GRC) ஒரு வாரத்தில் 5 அல்லது 6 நாட்களும் செயல்பட வேண்டும். புகார்கள் பதிவு செய்ய ஏதுவாக அலுவலக நேரத்திற்கு பிறகும் செயல்பட ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
16. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (TNSRLM) ஆதரவுடன் புகார்கள் பதிவு செய்ய Helpline (ஹெல்ப்லைன்) நிறுவப்பட்டு, அதனை மாவட்டத்தின் அனைத்து பகுதிக்கும் பிரபலப்படுத்த வேண்டும். மேலும், வானவில் மையத்தில் அனைத்து helpline எண்களும் பதிவு செய்யப்பட்டு, விளம்பரப்படுத்திட வேண்டும்.
17. மாவட்ட ஆட்சியர் மூலம் பாலின வள மையம்/ வானவில் மையம் (GRC)–யின் முக்கியத்துவத்தை பத்திரிகை செய்தி மூலம் அவ்வப்போது வெளியிட்டு அனைத்து மக்களும் அறியும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.
18. சம்பந்தப்பட்ட வட்டாரத்தின் வட்டார அளவிலான கூட்டமைப்பு பாலின வள மையத்திற்கு பொறுப்பாக இருக்கும். மேலும், தினசரி நிர்வாக ஆதரவை வழங்க வேண்டும்.
19. இந்த பொறுப்பு வட்டார அளவிலான கூட்டமைப்பு அதன் வங்கிக் கணக்கு மூலம் செயல்பாட்டுச் செலவு, சம்பளம் வழங்குதல், கையொப்பமிடும் அதிகாரம் ஆகியவற்றை நிர்வகிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
20. இந்த வட்டார அளவிலான கூட்டமைப்பு, பாலின வள மையம் மற்றும் வட்டார அளவில் பாலின மன்றத்திற்கு இடையே உள்ள அனைத்து நிர்வாக மற்றும் ஒருங்கிணைப்பு சிக்கல்களுக்கும் ஒரு தீர்வாக செயல்பட வேண்டும்.
21. வட்டார அளவிலான கூட்டமைப்பு செயலில் உள்ள சமூக மேம்பாட்டு குழு போன்ற செயல்பாட்டு நிறுவன வழிமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
22. வழிகாட்டி நெறிமுறைகளின்படி ஒவ்வொரு பாலின மையத்திற்கும் வழிகாட்டுதல் குழு (Steering Committee), வட்டார பாலின மன்றம் (Block level General Forum) அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

23. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் செயல்படும், ஓரிட சேவை மையத்துடன் (OSF) இணைந்து பாலின வள மையம் செயலாற்றி சட்டம் மற்றும் நிதி ஆலோசகர்களின் சேவைகளை பெற திட்ட இயக்குநர்கள் உறுதுணையாக இருத்தல் வேண்டும்.

24. பாலின வள மையம் காலாண்டு அல்லது அரையாண்டு நிதித் திட்டத்தை வட்டார அளவிலான கூட்டமைப்பு ஒப்புதலுக்காக முன்வைக்கும்.கூட்டம் மற்றும் தொடர் செலவுகளுக்கான முன்பணத்தை விடுவித்து பாலின வள மையம் சீரான செயல்பட்டிற்கு வழங்கலாம். பாலின வள மையம் தனது மாதாந்திர செலவின அறிக்கையை வட்டார அளவிலான கூட்டமைப்புக்கு மற்ற துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

25. பாலின வள மையம் உடன் தொடர்புடைய GRC மேலாளர்களின் ஊதியம். அந்தந்த வட்டார அளவிலான கூட்டமைப்புகளால் சமர்ப்பிக்கப்பட்ட வருகை சான்றிதழ் மற்றும் அறிக்கைகளின் சரிபார்ப்புக்குப் பிறகு விடுவிக்கப்பட வேண்டும்.

26. சட்டப்பூர்வ முறைகளின்படி அனைத்து செலவுகள் மற்றும் வவுச்சர்களின் கணக்கு புத்தகங்களை பாலின வள மைய மேலாளர் பராமரிக்க வேண்டும்.

27. Interim Unaudited Financial Report (IUFR)மற்றும் பயன்பாட்டுச் சான்றிதழ்கள் பாலின வள மையம் பரிந்துரைக்கப்பட்ட வடிவங்களில் நிதி முறைகளில் தீர்மானிக்கப்பட்டபடி சீரான இடைவெளியில் வட்டார அளவிலான கூட்டமைப்புக்கு சமர்ப்பிக்கப்படும்.

28. அனைத்து தொடர்புடைய வவுச்சர்/ரசீது புத்தகங்கள் முத்திரைகள், முன்பணம் கோருதல், முன்கூட்டிய தீர்வு போன்றவற்றிற்கான படிவங்களை பராமரித்து முடிவு செய்வதில் பாலின வள மையம் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கு திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்உதவ வேண்டும்.

29. பாலின வள மையம் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்பு நிதி அமைப்பு மற்ற கணக்குப் புத்தகங்களைப் பராமரிப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அனைத்து கட்டாய அளவுகோல்களையும் பூர்த்தி செய்ய வேண்டும்.

30. உள் மற்றும் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வட்டார அளவிலான கூட்டமைப்பு பிற கணக்கு புத்தகங்களின் தணிக்கையுடன் பாலின நிதியும் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

31. பாலின வள மையத்திற்கு விடுவிக்கப்படும் 5 இலட்சம் நிதியில் 1.50இலட்சம் தளவாட பொருட்களுக்காகவும், 0.75 இலட்சம் முதலாமாண்டு பராமரிப்பு நிதியாகவும், மீதமுள்ள 75 ஆயிரம் குறுகிய கால வைப்புத் தொகையாகவும்,

ரூ.2.00 இலட்சம் நீண்ட கால வைப்புத் தொகையாகவும் வைக்கப்பட வேண்டும்.

**<u>மேலும், கீழ்காணும் பட்டியலிலுள்ளவாறு கோப்புகள் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.</u>**

1. விண்ணப்பங்கள் பெற்ற கோப்புகள்
2. தனிப்பட்ட வழக்கு கோப்புகள்
3. பரிந்துரை வழக்குகள் கோப்பு
4. தீர்க்கப்பட்ட வழக்குகள் கோப்பு
5. சிஆர்பி வேலை முடிந்தது, பணம் செலுத்துதல், சுற்றுப்பயணம் கூற்றுக்கள், முதலியன கோப்பு
6. தீர்மானங்கள் பதிவு
7. மாதாந்திர முன்னேற்ற அறிக்கையிடல் கோப்பு
8. வருகை பதிவு
9. பார்வையாளர் பதிவேடு
10. ரொக்க புத்தகம் பெட்டிகேஷ் (Petti Cash)
11. பாலின மன்ற தீர்மான பதிவேடு
12. முகாம் பதிவேடு
13. நடவடிக்கை
14. அறிக்கை

**இணைப்பு:** பாலின வள மையம் / வானவில் மையம் திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள் – தமிழ்

ஒம்/–
மேலாண்மை இயக்குநர்
த.நா.ம.மே.நிறுவனம்

//உண்மை நகல் உத்தரவுபடி//

கூடுதல் இயக்குநர் (P&C)
த.நா.ம.மே.நிறுவனம்